# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 250 of 2022 |
| Deposition of witness for | : | PW8 |
| Name | : | விஜய் |
| Father's Name | : | சேகர் |
| Village | : | அவ்வை நகர் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி |
| Age | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 19th day of October 2024.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது கிருஷ்ணகிரி, சேலம் பைபாஸ் எதிரில் குடியிருந்து வருகிறேன். நான் கம்பி கட்டும் தொழில் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் கிருஷ்ணகிரியிலிருந்து வேப்பனப்பள்ளிக்கு காலை சுமார் 06.00 மணி முதல் 06.30 மணிக்கு வேலைக்கு சென்று கொண்டிருந்த போது, தளவப்பள்ளி முனியப்பன் கோவில் எதிரில் விபத்து நடந்திருந்தது. என்ன வாகனம் விபத்தில் ஈடுபட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. ஒரு பெண்ணுக்கும் அவருடைய இரண்டு மகன்களுக்கும் விபத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. இரண்டு மகன்களுக்கும் ஒன்பது வயது மற்றும் பன்னிரண்டு வயது இருக்கும். உடனடியாக 108 ஆம்புலன்ஸ் க்கு போன் செய்தேன். ஆம்புலன்ஸ் வந்த உடன் அவர்களை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு ஏற்றி அனுப்பி வைத்து விட்டு நான்

வேலைக்கு சென்று விட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.